பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

A/L —90
தாவரவியல்
உருவவியல்
சனி, ஞாயிறு 12. 30P.m
By
திரு. பாலா
விலங்கியல்
இழையவியல்
சனி, ஞாயிறு 11. 00 a.m
By
திரு. ஈசன்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

# உதயன்

விலை ரூ 2/-

A/L 89—90
பௌதீகவியல்
மீண்டும்
டிசம்பர் 02 முதல்
ஆரம்பம்
வாரத்தில் 3 மணிநேர
வகுப்புக்கள்
By
திரு. சோதிலிங்கம்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஹு கார்த்திகை மீ 16 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 20 ( 01 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 5

# இந்தியப் பிரசைகளை தாயகம் திரும்பும்படி ஆலோசனை

கொழும்பு, டிச.1
நாட்டின் தென்பகுதியில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் இந்தியப் பிரசைகளை தாயகம் திரும்பும்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஆலோசனை கூறியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும்வரையிலாவது அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று தூதரகம் தெரிவித்திருக்கிறது

மொனருகலையில் உள்ள அரசுக்குச்சொந்தமான சீனித் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த மூன்று இந்தியப் பிரசைகளான அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவத்தைத்தொடர்ந்தே இந்தியத் தூதரகம் இந்த ஆலோசனையை விடுத்திருப்பதாக பி பி சி வானொலி நேற்று மாலை அறிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தாயகம் திரும்பும்படி இந்தியப் பிரசைகள் கோரப்பட்டுள்ளனர்.

தென்பகுதியில் உள்ள வெளிநாட்டுக் கம்பனிகளில் சுமார் 500 இந்தியப் பிரசைகள் தொழில் புரிகின்றனர்

மொனருகலைத் தாக்குதலைத் தொடர்ந்து அவர்களில் பெரும்பாலோர் கொழும்புக்கு திரும்பிவிட்டனர்.

மொனருகலை சீனித் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த 12 பிரிட்டிஷ் பிரசைகளும் பாதுகாப்புக் கருதி கொழும்பு திரும்பிவிட்டனர். விரைவில் அவர்கள் தாயகம் திரும்பவுள்ளனர்.

தென்பகுதித் தீவிரவாதிகள் வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் வெளிநாட்டார் மீது தாக்குதல்களை நடத்தக்கூடும்என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதி வன்செயல்கள் தீவிரமடைந்து வருவதன் காரணமாகவெளிநாட்டு உல்லாசப்பயணி
(6-ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் அவதானிக்க

# சர்வதேச கண்காணிப்புக் குழு: அழைக்க அரசு முடிவு

## உள்ளூர் கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து செயற்படும்

கொழும்பு, டிசம்பர் 1

ஜனாதிபதித் தேர்தலையும் அதனைத் தொடர்ந்து வரும் பொதுத் தேர்தலையும் அவதானிக்க சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்றை அழைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சர்வதேச நாடாளுமன்ற யூனியன் காமன் வெல்த் அமைப்பு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு கண்காணிப்புக் குழு ஒன்றை அழைக்க நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதை கேட்டிருக்கிறார்.

இத்தகவலை ஜனாதிபதியே நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியிட்டார்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் இது சம்பந்தமாக சில அமைப்புக்களுடன் தாம் தொடர்பு கொண்டதாகவும்—

சாதகமான பதில் அப்போது கிடைக்கவில்லை என்றும் ஜனாதிபதி அமைச்சரவைக்கு நேற்றுத் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட உள்ள உள்ளூர் கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து இந்த சர்வதேச கண்காணிப்புக்குழு இயங்கும்.

உள்ளூர் கண்காணிப்புக்குழுவில் உள்ளூர் சட்ட அறிஞர்கள், பிரமுகர்கள் இடம்பெறுவர்.

இது குறித்து நேற்று முன்தினம் ஜனாதிபதி ஜெயவர்த்தன சில அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அதே சமயம் உள்ளூர் கண்காணிப்புக்குழுவுக்கு
(6-ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் 26 மாவட்டங்களில்

# 20 மாவட்டங்களில் சிவில் நிர்வாகம் இல்லை

கொழும்பு, டிச. 1
நாட்டின் 26 மாவட்டங்களில் 20 இல் சிவில் நிர்வாகம் இல்லை. இதனால் ஒரு கோடி மக்கள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

போக்குவரத்துச் சீர்கேடு, அரச அதிபர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்ட பயமுறுத்தல் காரணமாக அரச செயலகங்கள் சில மூடப்பட்டுள்ளன.

சில அரச அதிபர்கள் வேலை செய்யும் இடங்களை விட்டே வெளியூர் சென்று விட்டனர். கொழும்பில் இருந்து அனுமதி பெற்றே அவர்கள் சென்றுள்ளனர்.

இப்படி அந்த அரசு அதிகாரி சொன்னார்.

## தூர இடங்களுக்கான பஸ்சேவை ஜனவரியிலேயே

யாழ்ப்பாணம் டிச 1
கொழும்பு, கண்டி, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கான பஸ் சேவைகள் தொடர்ந்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டுவரும் இச்சேவைகள் தென்பகுதி அசம்பாவிதங்கள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் அளவிலேயே இச்சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம்என வ.பி.போ. சபை அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா,
(6 ஆம் பக்கம் பார்க்க)

## 80 பேர் பலி

டாக்கா, டிச.1
பங்களாதேஷில் நேற்று வீசிய சூறாவளியில் குறைந்தது எண்பது பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## யாழ் செயலகம் நேற்று மீண்டும் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச 1
யாழ்செயலகம்வாராந்தம் மூன்று நாட்கள் இயங்கும் என்று தெரிய வருகின்றது.

இந்த நடைமுறை நேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ளதாக செயலக வட்டாரங்கள் மூலம் தெரிய வந்தது.

இதன்படி செவ்வாய் புதன், வியாழன் ஆகிய தினங்களில் செயலகத்தின் அத்தியாவசியப் பிரிவுகள் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தினம் செயலகம் இயங்கிய போதிலும் ஊழியர்கள் வரவு குறைவாகவே காணப்பட்டது. (ஒ-5)

## ஜனாதிபதி வேட்பாளர்கள் வடக்கு - கிழக்கு செல்ல அமைதிப்படை அனுமதி தேவையா?

கொழும்பு டிச 1
ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்துக்குச் செல்ல இந்திய அமைதிப் படையின் அனுமதி பெறப்பட வேண்டுமா?

கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை ஒன்றில் நேற்று இது சம்பந்தமாக வெளியான செய்தி ஒன்று குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் பதிலளித்திருக்கிறது.

இந்தியத் தூதரகம் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையின் எப்பகுதிக்கும் இலங்கைப் பிரசைகள் எவரும் விஜயம் செய்ய இந்திய அரசிடமிருந்தோ, இந்தியத் தூதரகத்திடமிருந்தோ அனுமதி பெற வேண்டியதில்லை.

ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் உள்நாட்டு விவகாரம்,

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்
(6-ஆம் பக்கம் பார்க்க)

## மரணதண்டனை நாளை நிறைவேறுகிறது

புதுடில்லி, டிச. 1
மறைந்த பிரதமர் இந்திரா காந்தியைக் கொலைசெய்த சத்வன் சிங் (24வயது), சேஹர் சிங் (47 வயது) ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை நாளை வெள்ளிக்கிழமை காலை நிறைவேற்றப்படவுள்ளது.

இதற்கான ஆயத்தங்கள் புதுடில்லியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிரிகளில் ஒருவரான
(6-ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

1 - 12 - 1988
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7-45 முதல் 9-15வரை
ராகுகாலம்:-
1-45 முதல் 3-15வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும்
பொருந்தும்

# தமிழருக்கு சுயநிர்ணய உரிமை; சகல தரப்பினருடனும் பேசித் தீர்வு

## யாழ் வந்த மக்கள் கட்சியின் செயலாளர் சில்வா சொல்கிறார்

யாழ்ப்பாணம் டிச
சுயநிர்ணய உரிமை, கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட சுயாட்சி ஆகியவற்றை அடிப்படையாக வைத்து சிறுபான்மை இனமக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம். இது தொடர்பாக சகல தமிழ்ப் போராளிகள் குழுக்களுடனும், தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் மற்றும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்வோம். அவர்களின் கருத்து ஆலோசனைப் பரிமாறல்களையும் கவனத்திற்கெடுத்து தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்போம்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. வை. பி. டி. சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று யாழ் நகரில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இத்தகவல்களை வெளியிட்டார்.

திரு. சில்வா மேலும் தெரிவித்ததாவது:—

நாடு பிளவுபடுவதை நாம் எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது. நாடு பிளவுபடாத ஒரு முறையின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையும், கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட சுயாட்சியும் வழங்கப்படும்

சிறுபான்மையினர்பிரச்சினையைத் தனிஒரு பகுதியினர் தனித்து நின்று தீர்க்க முடியாது இருபகுதியினரும் ஒன்றிணைந்து பரஸ்பரம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு கருத்துப் பரிமாறல்களைச் செய்வதன் மூலமாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

மாகாண சபைகள் மாத்திரமே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் என்று கூறமுடியாது.
(6-ஆம் பக்கம் பார்க்க)

## ஒஹி வடபகுதி வருவார்

ஜனாதிபதி வேட்பாளரான திரு. ஒஸி அபேகுணசேகரா விரைவில் வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

தமிழ்ப் போராளிகள் குழுக்களின் பிரதிநிதிகளையும், தமிழ் மக்களின் ஏனைய பிரதிநிதிகளையும் சந்தித்து அவர் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்.

வடபகுதியில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு அவர் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ ஐ 10)

## முச்சந்தி முரளி



ஒவ்வொரு மாவட்டமும் கைநழுவிப் போகப்போக தர்மிஷ்டரும் ஒவ்வொரு படி இறங்கி வருகிறார் போலஇருக்கு.

## பாலகுமாருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிச.1
ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. வை. பி. டி. சில்வா மற்றும் டாக்டர் ராஜித சேனரத்ன, திரு. பி ஜோர்ச் ஆகியோர் நேற்று ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பாலகுமாரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தச்சந்திப்பு நேற்று யாழ் நகரில் இடம்பெற்றது.

இதேவேளையில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பிரமுகர்கள் ஈ.பி ஆர் எல் எவ், ஈ. என். டி. எல்.எவ். ரெலோ ஆகிய இயக்கப் பிரமுகர்களைச் சந்தித்து ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர்.

லண்டனில் வைத்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-ஐ-10)

## கோண்டாவிலில் ரெலோ காரியாலயம்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) கட்சிக் காரியாலயங்கள் விரைவில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்படும்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) யாழ். மாவட்டப்பொறுப்பாளர் திரு ரி.சுரேஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரெலோ கட்சிக்காரியாலயம் இப்போது கோண்டாவிலில் இயங்கி வருகிறது. அதேபோன்ற காரியாலயங்கள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மா கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம் டிச 1
மாவை ஏற்றிக்கொண்டு நாளை கப்பல் ஒன்று காங்கேசன்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் பொதுமக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளிலேயே மாவை விநியோகித்து வருகின்றன—

இதனால் சில தனியார் வியாபாரிகள் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலைக்கு மாவை விற்பனை செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது—

கப்பல் மூலம் மா கொண்டு வரப்பட்ட பின்னர் பொதுமக்கள் போதுமான அளவு மாவைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-5)

## பாக். எம்.பிக்கள் பதவிப்பிரமாணம்

இஸ்லாமாபாத், டிச. 1
பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் புதிய உறுப்பினர்கள் நேற்று பதவிப் பிரமாணம் செய்தனர்.

முதலில் மக்கள் கட்சித் தலைவி பெனஸிர்
(6-ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு கவர்னர் நளின் செனவிரத்ன

வடக்கு-கிழக்கு மாகாண கவர்னராக திரு. நளின் செனவிரத்ன நியமிக்கப்பட்டார்.

திரு. நளின் செனவிரத்ன இலங்கை இராணுவத்தின் தளபதியாக பணியாற்றியவர். இவருக்கு வயது 57.

வடக்கு-கிழக்கு மாகாண கவர்னராக ஜனாதிபதி மாளிகையில் நேற்று இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (இ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA CB 125 TWIN (SPORTS MODEL) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு:- செ. நாகேந்திர ராசா, சோதிட திருமண சேவை இல 6 நவீன சந்தை (மேல் மாடி) யாழ்ப்பாணம்
(8004)

புரொய்லர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- அ.யோகானந்தா, தபால் நிலைய அருகில், சாவகச்சேரி [80 5]

### மோட்டார் சைக்கிள்

நல்ல நிலையில் உள்ள Y 8. 100 யமாகா விற்பனைக்குண்டு தொடர்பு: 358 நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (8010)

Hoover பொலிசர் Car Fan 24W - 2, வெள்ளை இன நாலுமாத ஆண் பொமெரேனியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. சாந்தகுமார், No 8. புகையிரத நிலைய விடுதி, ஸ்ரான்லிவீதி. யாழ்ப்பாணம் ஆயுள்வேத கல்லூரிக்கு முன்பாக
(8002)

நல்ல நிறங்களில் உள்ள லவ்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பலவையிடலாம் 114, ... தெரு மணிப்புரி கொழும்புத்துறை.
(8011)

### ஏல விற்பனை

கன்னாதிட்டி... 18, புகையிரத வீதியில் உள்ள தங்கராஜ் மோட்டர்ஸில் உள்ள BSA மோட்டார் சைக்கிள்களும், உதிரிப்பாகங்களும், Honda உதிரிப்பாகங்களும் 5 12 88 திங்கட்கிழமை காலை 9 00 மணி முதல் மாலை 3 00 மணிவரை விற்பனையாளரின் முன்ன முழுப்பொருட்களையும் எடுக்க கூடியவர்கள் விரும்பத்தக்கது. பார்வையிடும் நேரம் 4 12 88 காலை முதல் மாலைவரை.
(7760)

### நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards). திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜுவுலியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C/357)

### சமூகக்கல்விப் பயிற்சிகள்

ஆண்டு 11, 10, 9, 8, 7, 6 வகுப்புக்குரிய சமூகக்கல்விப் பயிற்சிகள்-விடைகள் - வெளிவந்து விட்டன ஆக்கியோன்: க. குணராசா—ம் ஏ. விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(7715)

### கோழிக்குஞ்சு விற்பனை

Hisex, Goldencomet பிறவுண் சேவற் குஞ்சுகள் பேட்டுக்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை, றுப்பு பேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை 2 12-88 இல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில்.
(8003)

### கோழிக் குஞ்சு விநியோகம்

நன்கு பராமரிக்கப்பட்ட 2 மாத வயதுடைய பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒரு மாத வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 23, கடற்கரை வீதி ஈச்சமோட்டை. (8007)

## தேவை

வர்த்தகக் கடை ஒன்றிற்கு ஆண் விற்பனையாளர் உடனடியாகத் தேவை வயது 15க்கும் 30க்கும் இடையில் இருத்தல் வேண்டும் தொடர்பு:- சபாறேஸ் சென்ரர், பிரதான வீதி. அச்சுவேலி. (7950)

### கொம்பஷிட்டர் தேவை

ஓரளவு ஆங்கில அறிவுடைய கொம்பஷிங் தெரிந்த அல்லது பயில ஆர்வமுள்ள யுவதிகள் தேவை. 05-12-88 க்கு முன் கடிதமூலம் மட்டும் விண்ணப்பிக்கவும். "வீம" 104 பருத்தித்துறைவீதி. ஆனைப்பந்தி, யாழ்நகர். (7752)

### சோதிட திருமண சேவை

கைரேகை எண்சோதிடம் ஜாதகத்தைக் கொண்டு உங்கள் எதிர்காலத்தைச் சிறப்பியுங்கள் கிறிஸ்தவ. இந்து சமய மணமகன், மணமகள் உடன் தேவையானவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்;- கைரேகை. எண் சோதிட நிபுணர் செ நாகேந்திரா, கிறிஸ்தவ திருமண அமைப்பாளர் வின்ரோ - மகேந்திரா, 6. நவீன சந்தை மேல் மாடி மக்கள் வங்கிக்கு அருகாமை, யாழ்ப்பாணம். (8012)

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்த M S C பொறியியலாளருக்கு வயது 33 அவுஸ்திரேலியா மணமகனுக்கு பட்டதாரி பெண் தேவை தொடர்பு: A B C D E விவாகப் பொருத்துனர்,328 நாவலர் வீதி, ஆனைப்பந்தி. சனி, ஞாயிறு நாட்களில் தொடர்பு கொள்ளவும். (8009)

### தவறிவிட்டது

மன்னார் மாந்தை பெரியநாவற்குளத்தைச் சேர்ந்த திருமதி றிச்சேட் இராஜேஸ்வரி ஆகிய எனது ஒய்வூதிய அடையாள அட்டை புனித யாகப்பர் ஆலயத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது இல 26188W கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்படைக்கவும் (8014)

### அரியசந்தர்ப்பம்

உங்கள் வாகனங்களை விற்பனை செய்யவோ அல்லது பரிமாற்றம் செய்யவோ நீங்கள் நாட வேண்டிய இடம்: மது ரேடர்ஸ் No. 568 B. ஆஸ்பத்திரிவீதி. யாழ்ப்பாணம் எமதனையிருப்பில் Minnor Oxford Cambridge Farina Toyota 20 30,50 70 Hiace D/P Delica D/P Sunny V Wagon 1300/1200, Austin Vans D/P Peugueot 404/304 (7761)

## வகுப்புகள்

### A/L 89 இரசாயனம்

108 Brown Road A L 89 பௌதிக இரசாயனம் "சமநிலை" ஆரம்பம் (3-12-1988) சனி 3 15 P M (சனி. ஞாயிறு 3 15-4 15 P M) 4 15-6 00 P M (இரசாயனம் பிணைப்பு சேதன இரசயனம்) ஆசிரியர்: சத்தீஸ் (8016)

### ஆங்கில வகுப்பு

சாவகச்சேரியில் O/L ஆங்கிலம் 88 மீட்டல் பயிற்சிகள் திரு திருமதி ஷண் ஆசிரியர்களால் புதிய பழைய பாடத்திட்டத்திற்கமைய ஆரம்பம்: 5 12-88 காலை 9 மணி திங்கள், புதன். வெள்ளி மாதம் 25/- கஷ்நதின் இன்ஸ்ரியூட்ஸ், 23 டச்சு ரோட், சாவகச்சேரி.
(8013)

# SPOKEN ENGLISH

Duration 4 Months
ஆரம்பம்: 5 . 12 . 1988

## HARVARD INSTITUTE
SUCCESSORS OF
## CANTABIA INSTITUTE

(Sister Organisation of Oxonia Colombo)
No 21 Main Street Jaffna
வகுப்புக்கள், ஆஸ்பத்திரி வீதியில் நடைபெறும் நவீன சந்தை எதிரில்)
(C/836)

## வெற்றுச் சாக்கு
## கேள்விப் பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் பலரகமான 3500 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ரூ 5/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைப்புப் பணமாக ரூ. 500/- செலுத்தி சடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்" எனக் குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பவும் சாககுகளை கந்தோர் நேரத்தில பார்வையிடலாம்.

**விண்ணப்பமுடிவு திகதி: 10-12-88**

— பொதுமுகாமையாளர்,
புலோலி
பல நோ. கூட்டுறவுச் சங்கம்.
(C-825)

# CENTRE FOR PERFORMING ARTS
## நாடக அரங்கக் களப்பயிற்சியும் விரிவுரைகளும்

மேற்படி பயிற்சிகளும் விரிவுரைகளும் 1989 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம்வரை பிரதி சனிக்கிழமை தோறும் எம்மால் நடாத்தப்படவுள்ளன. மேற்படி பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் எமது அலுவலகத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 20 12 88க்கு முதல் எமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

-பொதுச் செயலாளர்
திருமறைக்கலா மன்றம்
223 பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (C/828)

## காணவில்லை



லலிதா வீட்டு உதவிப் பெண்ணைக் காணவில்லை. இவர் சிங்களக் குடும்பத்தைச்சேர்ந்தவர் வயது 15. உதவ விரும்புவோர் கீழ்க் காணப்படும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Mrs. R Thiyagesampillai,
169/5 Temple road, Nallur.
(7999)

## கண்ணீர் அஞ்சலி



### கருணாநிதி ஐங்கரன்
(தேசிய பயிலுநர் வட-பிராந்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை)

| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 17 - 10 - 1966 | 10 - 11 - 1988 |

10-11-1988இல் அகால மரணமடைந்துள்ளார்.

இவர் சற்கோவளம் பாடசாலை அதிபர் காருணநிதி அச்சுவேலி தெற்கு நவமணி தம்பதிகளின் மகனும் சமலகுமார் (லண்டன்) கருணைகுமார் (மேற்கு ஜேர்மனி). கிருஷ்ணகுமார் (சென்னை). ஸ்ரீகரன், பிரேமளாதேவி, பூலோகராணி பருமெதடிஸ்த பெண்கள் கல்லூரி) ஆகியவர்களின் சகோதரரும், கமலநாயகி (சச்சாரி முல்லைத்தீவு) யின் மைத்துனரும் அமிர்தசாகரனின் சிறிய தந்தையுமாவார்.

ஈமச் சடங்குகள் 11-11-1988 இல் பருத்தித்துறையில் நடைபெற்றது. இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

● அந்தியேட்டிக் கிரியைகள் 10-12-1988 சனிக்கிழமை காலை (8 00 மணி) செட்டித் தெரு, பருத்தித்துறையில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அத்தருணம் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

திரு. அ. கருணாநிதி,
திருமதி நவமணி கருணாநிதி.
(C/...)

## வணிகஜோதி வெளியீட்டு விழா

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி) வணிக மாணவர் மன்றத்தினரின் வணிகஜோதி 13ஆவது மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 2-12-1988, வெள்ளிக்கிழமை 10. 00 மணியளவில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு கல்லூரி அபிவிருத்திச்சபை. பழைய மாணவர்கள், பிற கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் எமது கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

—நன்றி—

வர்த்தக மாணவர் மன்றம்,
யாழ்/ கனகரத்தினம்,
ம ம வித்தியாலயம். (7765)

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

# A/L 90

(2 ஆவது புதிய பிரிவு)

## டிசம்பர் 02 இல் ஆரம்பம்

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல்: | திரு. மரியதாஸ் |
| வர்த்தகம்: | திரு. தேவா |
| அளவையியல்: | திரு. விக்கி |
| இந்துநாகரிகம்: | திரு காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ்: | திரு. மருதலிங்கம் |
| அரசியல்: | திரு. பஷீறாப் |
| புவியியல்: | திரு. வேலாயுதபிள்ளை |

சகல பாடங்களும் அலகு 01 இல் இருந்து ஆரம்பிக்கப்படும்.

10ஆம் திகதிக்குப் பின் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது,

(C-829)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

### Computer Programming in Basic Language

ஆரம்பம்: 5. 12. 88
பயிற்சிக்காலம்: 1 1/2 மாதம்
கட்டணம்: 950/-
(இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)

### COMPUTER PROGRAMMING IN dBASE III+

ஆரம்பம்: 6. 12. 88
பயிற்சிக்காலம்: 2 மாதம்
கட்டணம்: 1250/-
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் I B M. (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

## UNIKCO COMPUTER CENTRE

No: 5, POWER HOUSE Rd,
2 nd LANE, JAFFNA.
(Near Sub - Post Office)
(C/827)

## மீண்டும் வழமைபோல் விற்பனைக்கு உண்டு!!

**Keels Products**

Mutton, Beet, Chicken, Pork Sausapes Bacon, Meat Balls etc .........

Carnivel Ice cream ('காணிவல்'ஐஸ்கிறீம்)

பமிலி புளக், (Family Block) கப்ஸ் (Cups), பலவகையான சுவைகளில் ......

**Andreia Products**

உடைகத இறால். சிங்கறால், கணவாய் கணவாயமுட்டை, அறுக்குளா, பாரை மீன் etc ......



Eggs முட்டை

Broilers

புறொய்லர் கோழி இறைச்சி

விநியோகஸ்தர்:

## மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சறி
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு,
ஜெனரேட்டர் உதவியுடன் மின்சாரம் பெறப்படுவதால் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன. (C/826)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுமக்களுக்கு ரூ. 2,000 வழங்க நடவடிக்கை

## டிச.5 முதல கட்டம் கட்டமாகக் கிடைக்கும

மாங்குளம், டிச. 1 முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு அரச நிவாரணமான 2000 ரூபா வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

துணுக்காய், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு மேற்குறித்த உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து கட்டம் கட்டமாக இப்பணத்தை டிசம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் வழங்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு ரே.பொன்னம்பலம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்த 2000ரூபாவை மக்களின் நலன் கருதி காசோலையாக வழங்காது மாங்குளம், முல்லைத்தீவு, மக்கள் வங்கியூடாக பணமாக வழங்க வங்கிஉயர் அதிகாரிகளுடன் பலவித முயற்சிகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

(ஒ- 94)

### திருவெம்பாவை மனனப் போட்டி

சுழிபுரம், டிச. 1 சுழிபுரம இந்து இளைஞர் சங்கத்தினர் எதிர் வரும் திருவெம்பாவை நாட்களில திருவெம்பாவைப் பாடல்களை மனனம் செய்யும் போட்டியை நடத்தவுள்ளனர்.

சங்கச் செயலாளர் செல்வன் இ தவராசா போட்டி நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றார்.

மனனம் செய்பவர்களுக்கு திருவெம்பாவைப் பாடல்கள் கொண்ட நூல் சங்கத்தினரால் இலவசமாக வழங்கப்படும்.

(ச-ரி)

### பிரயாணக் கட்டணங்கள் திடீர் அதிகரிப்பு

மன்னார் டிச. 1 மன்னாரில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பிரயாணக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. மன்னாரில் இருந்து சங்குபிட்டிக்கு சில தனியார் வாகனங்களில அறுபது ரூபா கட்டணம் வழங்கப்படுகிறது முனபு இதற்கான கட்டணம் 20 ரூபாவாகும்.

மன்னாரில் இருந்து வவுனியாவிற்கு 50 ரூபா அறவிடப்படுகிறது இதனால் மன்னார் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மன்னாரில் எரிபொருளுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி கள்ளச் சந்தையில் தாராளமாக விற்கப்படுவதாக மக்கள் குறைப்படுகிறார்கள்.

அதேவேளை மன்னார் சாலை பஸ்கள் மன்னாரில் இருந்து தூர இடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவையை வழங்கி வருகின்றமையால் பிரயாணிகள் ஓரளவு ஆறுதல் அடைகின்றனர்.

(ஓ-ஐ-ரி)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் யூட் அன்ரனி**

யாழ்ப்பாணம் இல 151 நாவலர் குருக்குத் தெருவைச் சேர்ந்த சுயசிந் நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் யூட் அன்ரனி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (1 12 88) தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா அப்பப்பா, அப்பம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, லண்டன் பெரியப்பா, பெரியம்மா, கனடா பெரியப்பா, பெரியம்மா, மகேந்திரன் அங்கிள், ஜயந்தா ஆன்ரி, இந்திரன் சித்தப்பா, சுஜீர் அண்ணா பியோ அண்ணா, கெவின் அண்ணா, ஐறீன் அக்கா, கிஷாலினி அக்கா, அருட்திரு வில்லவரசிங்கம் தாத்தா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல கலைகளும் கற்று நீடிய ஆயுளும் செல்வமும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ அன்புடன் வாழ்த்துகின்றனர்.

(7990)

முதலாவது

**பிறந்த நாள் வாழ்த்து**

**செல்வி சா சயந்தினி (செல்லா)**

வடலியடைப்பைச் சேர்ந்த சாந்தலிங்கம் இதயராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி சயந்தினி இன்று (1-12-88) தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பெரியண்ணா, சயந்தன் சின்னண்ணா, சுதர்சன், பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், அத்தைமார், அன்ரிமார், அக்காமார், மச்சான்மார், அத்தான்மார், கணேஸ் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர் நல்லூர் முருகன் அருளால பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

இதயவாசம்,
வடலியடைப்பு (7848)

இரண்டாவது
பிறந்ததின வாழ்தது

★ நிரஜ் ★

தன்னீரூற்றைச் சேர்ந்த மயில்வாகனம் புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

✶ நிருஜ் ✶

இன்று (01 - 12 - 88) தனது இரண்டாவது பிறந்த நாளை வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அக்காமார், அப்பம்மாமார், மாமாமார், மாமிமார், அன்ரிமார், அண்ணா, தங்கை, மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகின்றோம். [7763]

**விக்னு** டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

கலை, வர்த்தக

**89 மீட்டல் DAY CLASSES**

**ஆரம்பம்: 05.12.1988** (காலை 8.00)

90 பிரிவு - 3 ஆரம்பமாகிவிட்டன.
[சனி, ஞாயிறு காலை 8. 00]

முக்கிய குறிப்பு:

I எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து நடாத்தும் ஒரே நிறுவனம்.

II வாரத்தில் ஐந்து நாட்களும் சகல பாடங்களும் நடைபெறும்

III மாணவர்கள் முன்கூட்டியே அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்

IV மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்

(C/821)




இன்றே சேகரிக்கத் தொடங்குங்கள்!

உங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் டிக்கிரி லியா, அம்பலமே பிஞ, அந்தரேயும் மனைவியும், பூசணித் திருடன் முதலிய விகட கதாபாத்திரங்களையும் அவர்களின் குறும்புகளையும் பற்றிப் படித்து மகிழுங்கள்

விசேட அடையாளம் பொறித்த சகல நெஸ்பிறே பக்கெட்டுகளின் உள்ளும் அவற்றைக் காண்பீர்கள். கதைகள் மும்மொழிகளிலும் எழுதப்பட்டு வர்ணச் சித்திரங்கள் சகிதம் மடிப்பு அட்டைகளில் அச்சிடப்பட்டுள்ளன. நீங்கள் அதிஷ்டசாலியானால் இந்தக் கதை அட்டைகளைப் பத்திரப்படுத்தி வைப்பதற்கான விசேட மேலுறைகளும் உங்கள் நெஸ்பிறே பக்கெட்டில் இருக்கலாம்.

மொத்தம் 12 சுவையான கதை அட்டைகளும் 2 கவர்ச்சியான மேலுறைகளும் (ஒவ்வொன்றும் 6 அட்டைகள் கொள்ளக்கூடியது) உள்ளன. இவற்றைச் சேகரித்துத் தனித்துவமான நாடோடிக் கதைத் தொகுதி ஒன்றை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்றே சேகரிக்கத் தொடங்குங்கள் !




நெஸ்லே வழங்கும் நெஸ்பிறே®


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
### பிரவேசம் - 1989

தகைமை: க. பொ. த (உயர்தர) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி
வைத்திய பாரம்பரையில் வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்பங்கள் 30 - 12 - 88 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்பப் பத்திரம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர்

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (7757)

---

### கரைச்சிப்பிரதேச சபை, 1989ஆம் ஆண்டுக்கான
## கேள்வி அறிவித்தல்

22-11-1988 ஆம் திகதி வீரகேசரி புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்விகள் சம்பந்தமாக அறியத் தருவது:-
கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் திகதி 07-12-1988 நண்பகல் 12.00 மணிவரையாகவும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 09-12-1988 நண்பகல் 12.00 மணிவரையாகவும் கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றேன்.
இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம். இதன் கீழ் குறிக்கப்படும் கடையும் அட்டவணையில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை

| குத்தகையின விபரம்; | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை. | கேள்விவைப்புப் பணம் | படிவப் பணம் |
|---|---|---|---|
| முரசுமோட்டை உப அலுவலகம், மாட்டிறைச்சிக் கடைகள். | | | |
| 13. லக்சபான மாட்டிறைச்சிக் கடை. | ரூ. 3,000/- | 100/- | 25/- |

க. குணராசா,
விசேட ஆணையாளர்,

கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி
திகதி: 28-11-1988 (C/454)

---


+
J. M. J
உங்கள் பயண அமைப்பாளர்




✱ கனடா ✱ ஜேர்மனி ✱ பிரான்ஸ்
✱ சுவிஸ் ✱ இத்தாலி

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றனர் என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதிவாரமும்

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்**
ஆகிய நாடுகளுக்கு
எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தாப்பமாகவும் இருக்கலாம்.
இது ஓர் அரிய சந்தாப்பம்

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன் அழைக்கின்றேன்

● முக்கிய குறிப்பு:
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்

**S. P. ANTON**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(யாழ்ப்பாணம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
C/795


---

### யாழ். பல. நோ. கூ. சங்கம் வரையுள்ளது
## மேடைத் தராசு திருத்தம்

எமது சங்கத்தில் பழுதடைந்த நிலையில் இருக்கும் 5 அந்தர் மேடைத் தராசுகள் 5 திருத்துவதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு "பொது முகாமையாளர், யாழ் பல நோ கூ சங்கம், யாழ்ப்பாணம்" என விலாசமிடப்பட்டு 02-12-1988 நண்பகல் 12.00 மணிக்கு முன்பு எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.
மேற்படி தராசினை, ஸ்ரான்லி வீதியில் இருக்கும் எமது இரும்புக் கிளையில் (விக்ரூரியூஷன் சென்றருக்கு முன்பாக) பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. காரியாலய நேரங்களில் (9.00 மணி முதல் 5.00 மணிவரை) பார்வையிடலாம் என்பதையும் அறியத் தருகின்றேன்.

பொது முகாமையாளர்.
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
5. 11. 1988 (C/455)

---

## 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17-5-1941
மறைவு: 16-11-1984
திதி: 1-12-1988

### திருமதி கமலாசனி கிருஷ்ணபிள்ளை

இல்லத்தின் ஒளிவிளக்காய்த் துலங்கி எம்மையெல்லாம் வழி நடத்திய எமது இதய தெய்வமே! நீங்கள் மறைந்து நாலாண்டு சென்றாலும் நாம் உங்கள் நினைவை மறவோம். உங்கள் பாதக்கமலத்தினை எமது கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள
கணவன், பிள்ளைகள்.
32/2, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (7846)

---

## 4ஆம் ஆண்டு நினைவு நாள்



### செல்வி நிமாலினி வீரசிங்கம்

தோற்றம்: 11-04-1972
மறைவு: 25-10-1984
திதி: 10-11-1988

பொங்கி வரும் பெரு நிலவே
எங்கள் தலைமகளே
அம்மா நீ எங்கள் மாளிகையில்
முதல் உதித்த முழு நிலவு
எங்கள் உயிரோடு கலந்திருந்த
எங்கள் அன்புப் பாப்பா,
எங்களைத் தவிக்கவிட்டு நீ மறைந்து
நாலாண்டு ஒரு நொடியில்
மறைந்ததம்மா
நாலாயிரம் ஆண்டுகள் மறைந்தாலும்
உன் அன்னை அழுத கண்ணீர் மாறுதம்மா.

அன்புத் தெய்வமே! உன் அன்ன நடையும் அழகான அந்தச் சிரிப்பும் நாங்கள் ஒன்றாகக் கூடிக்கொஞ்சி மகிழ்ந்த அந்தப் பசுமையான நினைவுகளும் நீ இல்லாத இடத்தை நிரப்ப முடியாது என்று நினைக்கும்போது எங்கள் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது.
எங்கள் அன்புத்தெய்வமே! கடல் அலைகள் ஒருநாள் ஓய்ந்துபோகலாம். நாம் இந்த மண்ணில் இருக்கும்வரையில் உன் நினைவலைகள் ஓயாதம்மா அதுவரைக்கும் எங்கள் கண்ணீர்ப் பூக்களை மாலையாக்கித் தினமும் ஆராதனை செய்வோம்.

உமது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்
பாசமுள்ள
அப்பா, அம்மா
பாசமுள்ள உடன்பிறப்புக்கள்
[illegible]ஜனனி,
34/1 இராமநாதன் வீதி, மற்றும் உறவினர்கள்.
யாழ்ப்பாணம். (7741)

---

### வான் குடை சாய்ந்து 10 பேர் காயம்

மாங்குளம் டிச 1
பாண்டியன்குளம் தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கத்திற்குச் சொந்தமான வான் வவுனியாவிலிருந்து மாங்குளம் நோக்கி வந்து கொண்டிருக்கையில் ரயர் வெடித்துக் குடை சாய்ந்தது
சுமார் பத்துப்பேர் காயமடைந்தனர். இருவர் ஆபத்தான கட்டத்திலிருந்ததை அடுத்து இந்திய இராணுவத்தினர் அவர்களை கிளிநொச்சி வைத்திய சாலைக்கு உடன் அனுப்பிவைத்தனர்.
(ஒ - 94)

---

கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி
## வெற்றிடங்கள்

கரைச்சிப் பிரதேச சபை பணிமனையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதி 05-12-1988

க. குணராசா,
விசேட ஆணையாளர்

கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி. (C/453)

---


## உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவு

1989 ஜனவரி பிற்பகுதியில் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான

### 1 மாத துரித பயிற்சி வகுப்புகள்

முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை!
திரு. T. N. பஞ்சாட்சரம் - திரு. K. சபாநாயகம் - திரு. S. மூர்த்தி

### 3ஆவது பிரிவு ஆரம்பம் 2-12-88

✱ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
✱ கடந்தகால (82, 83, 84, 87) வினவிடைப் பயிற்சிகள்.
✱ விரிவுரைகள் - திங்கள், புதன், வெள்ளி
✱ கட்டணம் ரூபா 150-00 (முழுப்பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:
தொடர்பு காலை 8.00 மணிமுதல் 12-00 மணிவரை

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**
101/10, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகாமையில்) (C-812)


---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




**சி. சண்முகலிங்கம்**
தாயின்மடியில்: 06 - 07 - 1944

**ச. கமலாதேவி**
தாயின்மடியில்: 15 - 02 - 1951

அழிப்பில்: 26 - 10 - 1987
திதி: 13 - 11 - 1988

எம் இனிய அன்புத் தெய்வத்தைக் கண்டீர்களா?
சண்முகலிங்கம், கமலாதேவி! நீங்கள் எங்கே சென்றீர்கள்?
எம் அணைந்த அன்புத் தெய்வமே! எம்
இதயத்தில் நீங்கள் என்றும் அணையாத்தீபமே!
30, 40 நிறையாத உங்கள் பருவம்
யமனைக் கவர்ந்து விட்டதோ?
எங்கே நீங்கள் எம்மைத் தவிக்க விட்டுச் சென்றீர்கள் ஐயா?
தீராத துன்பம் எம் மனதில் அலைமோதுதம்மா?
அனைவரிடமும் கள்ளம் கபடமின்றி அன்பாகப் பழகுவீரே
இன்று எல்லோரும் வேண்டாம் என்றும் தங்கையை
அழைத்துச் சென்றீரோ?

துடிக்குதையா எம் இதயம் அந்தோ?
கலங்குதையா எம் கண்கள் கண்ணீரால்
எம்முடன் மிகவும் அன்பாகப் பழகிவிட்டு பாதியில்
எம்மைப் பரிதவிக்கவிட்டுச் சென்று விட்டீர்களே
உங்கள் இறுதிப் பயணத்தைக் கூட எம்மால் காண முடியவில்லையப்பா
உங்கள் பொன்னான திருமேனி எங்கே அம்மா?
நீங்கள் மறைந்து முடிந்த இந்த ஓராண்டை நினைக்கும்போது
எம் உள்ளம் குமுறுதையா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக நாங்கள் அனைவரும்
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தம்பி
பஞ்சலிங்கம், தாய், சகோதரன், மகள், உற்றார்.
நந்தாவில் லேன், தாவடி தெற்கு,
கொக்குவில். (7991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

**பொருள்:**
அன்புடன் தொன்று தொட்டு வந்த உறவை உடையவர். அழிவு தரும் செயலைப் பழியவர் செய்த போதிலும் தம் அன்பு நீங்காமலிருப்பர்.


# உதயன்
உண்மை - அஞ்சாமை - ஒரு நிலை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
01-12 1988 த. பெ. இல 23


## இதயங்களைப் புதுப்பித்தல்

ஈழத்துத் தமிழ் மக்களின் இன்றைய வாழ்க்கையின் கவலைக்கிடமான நிலையை, வெகு யதார்த்தமாகவும் தத்ரூபமாகவும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் கல்லூரி அதிபர் ஒருவர்.

யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் அருட்திரு. பிரான்சிஸ் ஜோசப் அடிகள், கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில் தமிழர்களின் இன்றைய வாழ்வுநிலை குறித்துக் கவலை படக் கூறியுள்ளார்.

கடந்த சில வருடங்களாக தமிழர் வாழ்வு, வாழ்க்கையின் மதிப்பை இழந்து, உரிய மதிப்பீடுகளை இழந்து நிற்கின்றது. வாழ்க்கையில் நேர்மை, உண்மை, தனிப்பட்டவர் ஒழுக்கம் என்பன சிதைந்து போயின. உயிருக்கும், உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும் பண்பு, நமது கலாசாரத்தோடு இணைந்த நல்லொழுக்கம் என்பன உருக்குலைந்துபோயின.

எமது மண்ணில் இடம்பெற்ற அண்மைக்கால நிகழ்வுகள் இளசுகளின் பிஞ்சு உள்ளங்களை மிக மோசமாகப் பாதித்து உள்ளன.

அந்த நிகழ்வுகளால் உடல் ரீதியான பொருளாதார ரீதியான தாக்கங்கள் மட்டுமன்றி உளரீதியாகவும் ஆழமான வடுக்கள் ஏற்பட்டுள்ளன.

அந்த ஆழவடுக்கள் ஆறுவதற்கு நீண்ட காலமாகலாம். — இவ்வாறு அதிபரான அடிகளார் கவலை வெளியிட்டிருக்கிறார்.

ஒரு மனிதனுக்கு அவனது உடலில் ஏற்படும் காயத்தை மருத்துவத்தின் மூலம் குறுகிய காலத்தில் மாற்றிவிடலாம். ஆனால் உள்ளத்தில் உண்டான காயத்தை மாற்றுவது கஷ்டத்திலும் கஷ்டமான காரியம்.

இங்கு ஒரு மனிதனின் இதயம் மட்டுமா புண்பட்டுக் கிடக்கிறது? இலட்சக்கணக்கான தமிழர் இதயங்கள் புண்பட்டுச் சிவந்துள்ளனவே!

உறவுகள் பிரிவு, உடைமைகள் சேதம், உரிமைகள் பறிப்பு, உண்மைக்கும் நேர்மைக்கும், நீதி நெறிகளுக்கும் மதிப்பின்மை என்ற இழிநிலை ஆகியவற்றால் இலட்சோப இலட்சம் தமிழ்மக்களின் இதயங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

ஓர் இதயத்தின் புண்ணை ஆற்றுவதே இயபப இயலாத இமாலயச் சோதனையும் வேதனையும் கலந்த காரியமாக இருக்கும் போது —

இலட்சோப இலட்சம் இதயங்களைக் குணமாக்கி, காயத்தை ஆற்றிப் புதுப்பிப்பது எவ்வளவு கஷ்டம்? இலகுவானதா?

இந்த இதயப் புதுப்பித்தல் ஒரு சிலரால் செய்து முடிக்கப்படக்கூடிய ஒன்றல்ல. சமூகத்தின் சகல தரப்பினரதும் ஒன்றுபட்ட கூட்டு முயற்சி தேவை.

அடிகளார் கூறியதுபோல, அரசியல் வாதிகள் மதத் தலைவர்கள், மத நிறுவனங்கள், அதிகாரிகள், ஆசிரியர்கள், இளைஞர் தலைவர்கள் ஆகிய பல தரப்பினரின் கூட்டு உழைப்பும் அவசியம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வும், உடைமைகளுக்குப் புனர் அமைப்பும் உருவாக்கப்படுவதற்குமுன், உடைந்த உள்ளங்களைப் புதுப்பித்தாலே, முன்னைய இரண்டும் அர்த்தம் உள்ளனவாக, பயன் உள்ளனவாக மாறும்.

இதனைச் சமூக நலன்விரும்பிகள், மக்கள் வாழ்க்கையை மறுசீரமைக்க விரும்புவோர் கவனத்தில் கொள்வது அவசியம்.

### மூன்று ஆண்டுகள் ஆகியும்

## சுகாதார நிலையம் இன்னும் திறக்கப்படவில்லை

முல்லைத்தீவு, டிச 1

முல்லைத்தீவு செல்வபுரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட சுகாதார நிலையம் இதுவரை திறக்கப்படவில்லை. இங்கு கடமையாற்ற நியமனம் செய்யப்பட்ட மருத்துவ மாதுவும் இதுவரை பதவி ஏற்கவில்லை.

வட்டுவாகல், செல்வபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகள் பிரசவத்துக்காக முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டியிருக்கிறது எனவே சுகாதார நிலையத்தைத் திறந்து மருத்துவமாதைக் கடமையாற்ற வழி செய்தால், கர்ப்பிணிகள் வீணாக அலைச்சல்படத் தேவையில்லை என முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலத்துக்கு இப்பகுதிப் பிரமுகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-ச-92)

### அரபாத்துக்கு நுழைவு விஸா மறுப்பு

# அமெரிக்க அரசு மீது வழக்குத் தொடர ஐ. நா. சட்டக்குழு தீவிர பரிசீலனை!

## விருந்தாளி நாடு, ஐ. நா. வை பிணையாளியாகக் கருதுகிறது

### என்று அரபாத் கண்டனம்

ஐ நா நவ 30

பலஸ்தீன இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் பேசவிருந்த ஐ. நா பொதுச் சபைக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

நாளை வியாழக்கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐ நா பொதுச்சபையில் அரபாத் பலஸ்தீனப் பிரச்சினை பற்றி பேச இருந்தார்.

அவருக்கு அமெரிக்க அரசு நுழைவு விஸா மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து விசேட கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையில் அமெரிக்க விஸா மறுத்த செயலை உலக நாடுகள் பல கண்டித்துள்ளன.

சோவியத் யூனியனும் பிரிட்டனும் முடிவை மறுபரிசீலனை செய்யும்படி அமெரிக்காவைக் கேட்டுள்ளன.

''உலக நாடுகளின் கண்டனம் எப்படி இருப்பினும் எமது முடிவை மாற்றப்போவதில்லை'' இப்படி அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் தெரிவித்தார்.

ஐ நா சட்டக்குழுவும் முடிவை மறுபரிசீலனை செய்யும்படி அமெரிக்காவைக் கேட்டிருக்கிறது.

அமெரிக்கா தொடர்ந்து அரபாத் அனுமதி மறுக்குமானால் ஐ நா பொதுச்சபைக் கூட்டத்தை ஜெனிவாவில் நடத்த வேண்டும் என்ற யோசனைக்கு ஆதரவு பெருகி வருகிறது.

அமெரிக்க அரசின் முடிவை எதிர்த்து றேகன் நிர்வாகத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யவும் ஐ நா தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, விஸா வழங்க மறுத்ததைக் கண்டித்து யாசிர் அரபாத் அமெரிக்க அரசுக்கு கண்டனக் கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார்.

'ஐ நாவின் விருந்தாளி நாடான (Host Country) அமெரிக்கா ஐ நாவை (Hostage) பிணையாளியாக வைதது இருக்கிறது'— என்று அரபாத் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (எ)

### கண்டனம்

லண்டன், நவ 30

தீவிரவாத நடவடிக்கை தொடர்பாக தேடப்பட்டு வரும் ரோமன் கத்தோலிக்க மதகுருவான வணபிதா பட்ரிக்ரயானை நாடு கடத்த மறுத்ததற்காக பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் பெல்ஜியம். அயர்லாந்து அரசுகளை வன்மையாகக் கண்டித்துள்ளார். (எ)

### நியமனப் பத்திரம் தாக்கல்

இஸ்லாமபாத். நவ 30

பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், செனற் சபை உறுப்பினர்கள் ஆகியோரினால் தெரிவுசெய்யப்படுவர்.

டிசம்பர் 6 ஆம் திகதி நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று பிரதம தேர்தல் ஆணையாளர் ஞாயிறன்று அறிவித்தார். (எ)

வெளி உலகில்

## பெனஸிர் பிரதமராகும் வாய்ப்பு அதிகரிப்பு!

இஸ்லாமபாத் நவ 30

திருமதி பெனஸிர் பூட்டோவின் மக்கள் கட்சிக்கு மொஹாஜீர் குவாமா இயக்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் திருமதி பெனஸிர் சாதாரண பெரும்பான்மை கொண்ட அரசு ஒன்றை அமைக்கும் வாய்ப்பு அதிகரித்து இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய நாடாளுமன்றத்தில் மொஹாஜீர் குவாமா இயக்கத்துக்கு 13 உறுப்பினர்கள் உள்ளனர். பலுசிஸ்தான் கட்சியும் மக்கள் கட்சி அரசு அமைக்க ஆதரவு தெரிவித்தது.

இதன் மத்தியில், திருமதி பெனஸிர் பூட்டோவின் வாசஸ்தலத்தைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு பலப்படுத்தியுள்ளது.

வெளியுறவு அமைச்சுச் செயலாளர் நேற்று முன்தினம் திருமதி பெனஸிர் பூட்டோவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்,

இதற்கு முதல் இஸ்லாமபாத்தில் உள்ள அமெரிக்க, சோவியத் தூதர்கள் திருமதி பெனஸிர் பூட்டோவை அவரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்த நடவடிக்கைகள் நாளை [வியாழன்] திருமதி பெனஸிர் பூட்டோவையே பாகிஸ்தானின் புதிய பிரதமராகப்பதில் ஜனாதிபதி நியமிப்பார் என்ற எதிர்பார்ப்பை உறுதிப்படுத்திஉள்ளது. [எ]

### 1984 டிசம்பரில் ஏற்பட்ட

## போபால் விஷவாயுக் கசிவு அனர்த்தம்; தினமும் ஒருவர் வீதம் இன்னமும் சாவு!

போபால், நவ 30

போபால் விஷவாயுக்கசிவு அனர்த்தம் இன்னமும் தொடர்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விஷவாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டு உயிர் தப்பியவர்கள் சராசரியாக தினமும் ஒருவர் வீதம் கடந்த நான்கு ஆண்டுகளாக உயிரிழந்து வருவதாக அரசு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

1984 டிசம்பரில் போபால் இரசாயனத் தொழிற்சாலையில் மெதில் ஐஸோஸயனேட் என்ற (Methyle Isocyanate நச்சு வாயு கசிந்ததினால் முதல் இரண்டு தினங்களில் 1,700க்கு அதிகமானோர் உயிரிழந்தனர்.

அதன் பின்னர், பாதிக்கப்பட்டவர்கள் படிப்படியாக இறந்து வருகின்றனர் என்று இப்போது அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு அக்டோபர் வரை இவ்வாயுக் கசிவினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3,289 என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்போரின் அடுத்த உரித்துக்காரருக்கு 10 ஆயிரம் ரூபாவீதம் மத்தியப் பிரதேச மாநில அரசு இதுவரை 3 கோடி 28 லட்சம் ரூபாவை (இந்தியப் பணத்தில்) நட்டஈடாக வழங்கியிருக்கிறது. (எ)

## முஸ்லிம் காங்கிரஸ் பிரேமாவுடனும் பேச்சு

கொழும்பு டிச. 1

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பிரதமர் பிரேமதாஸாவைச் சந்தித்து இரண்டு மணித்தியாலங்கள் பேச்சு நடத்தினார்.

முஸ்லிம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துஇப் பேச்சுக்கள் நடந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதமரின் அழைப்பின் பேரில் இச்சந்திப்பு இடம் பெற்றது. ''முஸ்லிம் மக்களுக்கு தனித்துவமான அமைப்பு ஒன்று இருக்கவேண்டும் என்ற எனது கருத்தை பிரதமரிடம் எடுத்துச் சொன்னேன். பிரதமர் அதனை வரவேற்றார்; இணையும்படி அவர் கேட்கவில்லை'' இப்படி ஜனாப் அஷ்ரப் பின்னர் சொன்னார். (உ-எ)

## சமயா சமய ஊழியர்கள் நிரந்தரமாகினர்

அரசினர் வைத்தியசாலைகளில் சமயாசமய ஊழியர்களாகக் கடமை ஆற்றிய சிற்றூழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதாக யாழ்-கிளிநொச்சி மாவட்டங்களின் பிராந்திய சௌக்கிய சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம்மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமை ஆற்றிய ஊழியர்களுக்கு மாவட்ட மட்டத்திலான இடமாற்றங்களும் அண்மையில் வழங்கப்பட்டன. (சரி)

### பாராட்டு விழா

வைகறை மாதாந்த கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியர் திரு.பொ. பூமிநாதனைக் கௌரவிக்குமுகமாக யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வு விடுதித்தலைவர் திரு எம். நமசிவாயம் தலைமையில் பாராட்டு விழா இடம் பெற்றது. (ச)

## நீதி, சமாதானம் வேண்டி பூசகர் 45 நாள் உண்ணாவிரதம்

மன்னார், டிச. 1

மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் பிட்டி ஆலடி அதிசய விநாயகர் ஆலய பூசகர் கடந்த பத்தாம் திகதி முதல் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை தொடர்ந்து 45 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

நாட்டில் நீதி, தர்மம், உண்மை. சமாதானம் ஆகியவற்றை ஏற்படுத்தவே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

உண்ணாவிரதத்தின் இறுதிநாளான டிசம்பர் 24 ஆம் திகதி இவர் தீக்குளித்துத் தனது உண்ணாவிரதத்தை முடிக்க உளளார். (ஐ-ச)

### நாயகன் நானே

குருநகர், டிச 1

'சின்னக்கடை புதிய சந்தைப் பகுதியில் நடைபெற்ற திருட்டுச் சம்பவத்தின் நாயகன் நானே'

இவ்வாறு எழுதப்பட்ட மட்டையைக் கழுத்தில் அணிவித்தபடி இளைஞர் ஒருவர் குருநகர் புதிய சந்தை முகப்பில் கட்டி வைக்கப்பட்டிருந்தார்.

சின்னக்கடைப் பகுதியில் நடைபெற்று வந்த திருட்டுக்களை அடுத்து குருநகர் புதிய சந்தை வர்த்தகர் சங்கம் விரித்து இருந்த வலையில் மேற்படி இளைஞர் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இந்திய அமைதிப் படை முகாமில் ஒப்படைக்கப்பட்ட அந்த இளைஞர் விசாரணையின் பின் மேற்சொன்ன தண்டனையுடன் விடுவிக்கப்பட்டார். (ஒ-ச-251)

## சித்தஆயுர்வேத மருத்துவக்கல்லூரி ஆண்டிறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம் டிச 1

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஆண்டிறுதிப் பரீட்சையில சித்தி அடைந்தவர்கள் வருமாறு:-

**3 ஆம் வருடம் முதற்பிரிவு:**
சி மஞ்சுளா, ஆ. தனபாக்கியம், ந நந்தினிதேவி, இ. வதனபாஸ்கரி நா. கலாநிதி.

**2 ஆம் மேற்பிரிவு:**
இ. ஜெயஸ்ரீ, ஐ. மாலதி

**2 ஆம் கீழ்ப்பிரிவு:**
து கமலசிங்கம்

**சாதாரண சித்தி**
[illegible] நாயகி.

**2 ஆம் வருடம் முதற் பிரிவு:**
ந. சண்டிகாபரமேஸ்வரி, க. சிவராஜா, செ. ஸ்ரீசாந்தினி

**2 ஆம மேற்பிரிவு:**
க. மேகலோ ஜனி, க. சரோஜினிதேவி, அ. சியாலரீயா அனிட்டா.

**2 ஆம் கீழ்ப்பிரிவு:**
ப பத்மராணி, ஸ்ரீ. ஊர்மிளா.

**சாதாரண சித்தி:**
ச. மகிழ்மலர், ந சந்திரமதி, எச். போகரஞ்சனி, ச. புஷ்பலீலா, ந ஜெயராஜா, க. ராஜேஸ்வரி, ச. யோகானந்தி.

**1 ஆம் வருடம் முதற்பிரிவு:**
அ. தேவரஞ்சனி, ஞா. மேரிபியற்றிஸ், ப. சத்தியநாதன்

**2 ஆம் மேற்பிரிவு:**
தி. கலாரதி, ந சுவேந்தினி.

**சாதாரண சித்தி:**
க. தங்கத்தாயமரைச் செல்வன், க. சாந்தகுமாரி, ந. தவச்செல்வன், க. நிர்மலாதேவி, வே. கணேஷவேல், ஆ. சுந்தரேஸ்வரி. க. ஜீவானந்தம். ச.கௌரி, த. லலிதாவதி, ந. உஷா, மா. கிரிசாந்தி. (ஒ)

### மினிபஸ் கட்டணம் குறைப்பு

மண்டைதீவு. டிச. 1

யாழ் மண்டைதீவு மினிபஸ் கட்டணம் தற்பொழுது குறைக்கப்பட்டுள்ளது. (ச-88)

### கஷ்டத்தில் உள்ள நிதி நிறுவனங்களில்

## வைப்புச் செய்தவர்களுக்கு பணம் வட்டியுடன் மீளளிப்பு

### அனுரா கூறுகிறார்

கொழும்பு டிச.1

பணக் கஷ்டத்தில் உள்ள நிதி நிறுவனங்களில் பணம் வைப்புச் செய்துள்ளவர்கள் அனைவருக்கும் வட்டியுடன் வைப்புப் பணம் கொடுக்கப்படும்.

சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா ரத்தினபுரியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், யு என் பி. அரசின் கீழ் நிதிநிறுவனங்கள் பல வங்குரோத்தாகின. இதன் மூலம் பணம் வைப்புச் செய்தவர்கள் கஷ்டமடைய வேண்டியதாயிற்று. அப்படி கஷ்டமடைந்த பணம் வைப்புச் செய்தவர்களுக்கு சுதந்திரக்கட்சி அரசு நிவாரணம்வழங்கும்''— என்று தெரிவித்தார். (இ-எ)

## 11 ஆண்டுகளாக பிரேமதாச கனவு கண்டு கொண்டிருந்தாரா?

### ரோனி டி மேல் கேட்கிறார்

கொழும்பு. டிச 1

புதிய பார்வை, புதிய தீர்வு என்று பிரதமர் பிரேமதாச இன்று பேசி வருகிறார் கடந்த 11 ஆண்டுகளாக அவர் கனவு கண்டு கொண்டிருந்தாரா?

ஐ.தே.க அரசில் 11 ஆண்டுகள் நிதி அமைச்சராகப் பணியாற்றிய திரு. ரொனி டி மெல் ஜா-எலவில் நடந்த சுதந்திரக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கேட்டார். திரு டி மெல் மேலும் சொன்னதாவது:

பத்துலட்சம் இந்திய வாக்காளர் யுஎன்பிக்கு வாக்களிப்பர் என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருக்கிறார் என்று பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

அச்செய்தி சரியோ என்பது எனக்குத் தெரியவில்லை. அச்செய்தி உண்மையானால், அந்தப் பத்துலட்சம் வாக்காளர் எங்கு வாழ்கிறார்கள் என்பதை தொகுதிவாரியாக தொண்டமான் விவரிப்பாரா?

எமது புள்ளி விவரப்படி மூன்றுலட்சம் இந்தியருக்குத்தான் வாக்குரிமை உண்டு.

அந்த வாக்குகளையும் முழுமையாக தொண்டமானால் யுஎன்பிக்குப் பெற்றுக்கொடுக்க முடியாது.

தொண்டமான் சொல்வதுபோல நடக்க மலையக இளைஞர்கள் இன்று தயாராக இல்லை.

ஆகவே தொண்டமானின் 10 லட்சம் வாக்குகள் கிடைக்கும் என்று யுஎன்பி எதிர்பார்த்தால் அவர்கள் கனவுலகில் வாழ்கிறார்கள் என்றுதான அர்த்தம் கொள்ள வேண்டும்.

பிரதமரின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நான் முட்டுக்கட்டையாக இருந்தேன் என்று பிரேமதாச கூறி வருகிறார்.

டிசம்பர் 19இல் அவரின் 'கிரகம்' நிச்சயம் இடம் மாறத்தான் போகிறது. அதன் பின்னர்தான் நாடு நிம்மதிப் பெருமூச்சை விடும்.

இவ்வாறு திரு. ரோனி டி மெல் தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

01 - 12 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுரம் ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள

மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

### ஜனாதிபதி வேட்பாளர்கள். ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு முழுப்பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் எம்மை கேட்டுக்கொண்டன. அதைத் தொடர்ந்தே வேட்பாளர்களுக்கு முழு அளவிலான பாதுகாப்பு வழங்க இந்திய அமைதிப் படை முன்வந்திருக்கிறது.

இப்படி இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ எ)

## முக்குக் கண்ணாடிகள்

(Reading Glass with Latest Frames)

அழகான பிறேமுடன் கூடிய மூக்குக் கண்ணாடிகள் 1 00 + தொடக்கம் 3 00 + வரையும் கிடைக்கும் விலை ரூபா 62/-ல் இருந்து சகல விலைகளிலும். சொற்ப அளவு மட்டுமே இருப்பதால் உங்கள் தேவைகட்கு முந்துங்கள்.

(F) பென்ஸி ஹவுஸ்,
68 - பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(யாழ்நகரில் வேறுஎங்கும் கிளைகள்இல்லை)
(C832)

## எஸ். ரி. அன்ரன்

கிறிஸ் கப்பலுக்கு எம்மிடம் தந்த கீழே உள்ள பெயருடையவர்கள் உடனே வந்து சந்திக்கவும்.

1. Manuvelpillai Edman, P. P. No. H 0353295 Mandaitivu
2. Gregory Yoganathan. P. P No. H 0373688 Mandaitivu.
3. Veeravagu Kanagasabapathy, P. P. No H 0278838 Karampon.
4. T. Y. Joseph Cristy P. P. No. G 0300935 Kankesanthurai.
5. Mr. Rajendran Antony Vijendran, P. P. No H 0273768 Kankesanthurai.
6. Gaspar Denis Jeyakumar, P. P No. H 0065789 Kayts.
7. P. Logarajah, P. P. No. J 0406528 Manipay.
8. P. Pushpathas P. P. No. J 0421482 Jaffna.
9. L. Anton Edinbaro. P. P. No H 0039118 Valvettithurai.
10. E Christie Antonythas, P. P. No. J 0224495 Jaffna,
11. S Rasalingam, P. P. No. H 0499294 Karaitivu.
12. R Thiagalingam, P. P. No J 0003507 Point Pedro.

No. 648, /3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C-460)

ரூ. 1000 பெறத் தகுதியுடைய

# 4,035 குடும்பங்களின் பட்டியல் நேற்று வெளியானது

காசோலைகள் இன்று வங்கிகளுக்கு அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் டிச, 1

மீளக்குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபாவை பெறத் தகுதியுடைய 4 035 குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் யாழ் செயலகத்தினால் நேற்று வெளியிடப்பட்டது.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏழாலை தெற்கு, சுன்னாகம், கந்தரோடை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 986 குடும்பங்களும்-

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எழுதுமட்டுவாள் சாவகச்சேரி நகரம், வரணி வடக்கு, சரும்பைக் குறிச்சி, இடைக் குறிச்சி, பற்றுளை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 437 குடும்பங்களும்-

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை வடக்கு, தையிட்டி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 953 குடும்பங்களும்-

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வடக்கு, இடைக்காடு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 764 குடும்பங்களும்-

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெரியகடை (கிரான்டபசார்) கொட்டடி, ஈச்சமோட்டை, குருநகர் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 611 குடும்பங்களும்-

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கரவெட்டி தெற்கு கரவெட்டி மேற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் 284 குடும்பங்களும் இந்தப் பட்டியலில் அடங்குகின்றன

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையூடாகவும்-

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையூடாகவும்-

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையூடாகவும்-

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கிளையூடாகவும்-

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக் கிளையூடாகவும்-

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு தெல்லிப்பளை மக்கள் வங்கிக் கிளையூடாகவும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

தகுதியுடையவர்களின் பெயர்ப்பட்டியலும், அவர்களுக்கான காசோலைகளும் இன்று சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ 5)

தெல்லிப்பளை, சங்கானை பகுதிகளில்

## குடியமர்ந்த அகதிகளுக்கு ஒரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச 1

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன் வந்த அகதிகளில் தெல்லிப்பளை, சங்கானை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்தவர்களின் குடும்பத் தலைவர்கள் அவ்வப்பகுதி உ. அ. அதிபர் பணிமனையில் சமுகம் அளிக்கும்படி யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

தெல்லிப்பளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் நாளையும் சங்கானைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதியும் சமுகமளிக்க வேண்டும். குடும்பத் தலைவர் அல்லாது ஏனையவர்களில் ஒருவர் இந்தியா சென்றிருந்தால் அவர் குடும்பத்தலைவருடன் செல்ல வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் இந்திய அரசின் பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை, காங்கேசன் நடேஸ்வராக் கல்லூரி/ யாழ் இந்துக் கல்லூரி/ யாழ். செயலகத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை, கிராம சேவையாளரால் விநியோகிக்கப்பட்ட அறிமுக அட்டை போன்ற ஆவணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

கிராம சேவையாளரின் அறிமுக அட்டை இல்லாதவர்கள் இவ்வட்டை இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அவரிடம் இருந்து கடிதம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். (ஒ)

### பாக் எம். பி..,

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பூட்டோ பதவிப் பிரமாணம் செய்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தினுள் பிரவேசித்ததும் நாடாளுமன்ற அதிகாரிகள் திருமதி பூட்டோவை அழைத்துச்சென்று முன்னாள் பிரதமர் ஜுனேஜோ அமர்ந்த ஆசனத்தில் இருக்க வைத்தனர். (இ-எ)

## கோயில் மணி ஓசை கேட்டு கொள்ளையர் ஓடித்தப்பினர்

யாழ்ப்பாணம், டிச. 1

மக்களின் கூக்குரலையும் கோயில்களின் மணி ஓசையையும் அடுத்து கொள்ளையர் அவ்விடத்தை விட்டு ஓடித்தப்பினர்.

செவ்வாய் இரவு 8-40 மணியளவில் நல்லூர்ப் பகுதியில் கொள்ளையர்கள் சிலர் நடமாடவே அப்பகுதி மக்கள் கூச்சல் இடத் தொடங்கினர். நாய்கள் ஓலமிடத் தொடங்கின.

இதனை அடுத்து இப்பகுதியிலுள்ள கோயில்களில் மணிகள் அலறத் தொடங்கின.

ஆபத்தை உணர்ந்த கொள்ளையர்கள் அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர் என்று கூறப்பட்டது (ஒ)

## சூட்டுக் காயங்களுடன் இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம். டிச 1

படையினரைக் கண்டு ஓடியவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு வழிப்போக்கர்கள் காயமடைந்தனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

வட்டக்கச்சிப் பகுதியில் அமைதிப்படையினர் வாகனத்தில்ரோந்து சென்று கொண்டிருந்த பொழுது வீதியால் வந்த வழிப்போக்கர் ஒருவர் அவர்களைக் கண்டு ஓடினார் எனவும் அப்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஓடியவரும் மற்றும்ஒருவரும் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது

காயமடைந்தவர்களான குணம் - தங்கவேலாயுதன் (வயது 32) பொன்னையா இராஜ்குமார் (வயது 28) ஆகிய இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

### தூர இடங்.--

முல்லைத்தீவு மன்னார் பஸ்சேவைகள் தொடர்ந்தும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டு வருகின்றன. (ஒ-10)

### மரண

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சேஹார்சிங் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட கருணை மனுவை ஜனாதிபதி வெங்கடராமன் நிராகரித்து விட்டார்.

சத்வன்சிங் சார்பில் கருணைமனு சமர்ப்பிக்கப்படவில்லை. (இ-எ)

### இந்தியப். ,.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வருகை நிறுத்தப்பட்டு விட்டது-

கொழும்பு அரசின் ஆலோசனையின் பேரில் தென்பகுதியில் இருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சுமார் 6 ஆயிரம்பேர் தாயகம் திரும்பி விட்டனர். (இ-எ)

## தமிழருக்கு சுய நிர்ணய....,

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை போன்ற பல்வேறு மொழிபேசும் மக்களைக் கொண்ட நாடுகள் மாகாணசபை அமைப்பு முறை இல்லாமலேயே இத்தகைய பிரச்சினையைத் தீர்த்து ஒற்றுமையாக இருந்து வருகின்றன

தமிழ் மக்களின் சமுதாய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு முடிவான ஒரு தீர்வு காண்பதே எமது நோக்கமாகும்.

தமிழ் மக்கள் அமைதியுடனும், கௌரவத்துடனும் வாழ்வதையே நாம் விரும்புகிறோம்

இந்தப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலம் இந்திய அமைதிப் படை திரும்பிச் செல்வதற்கு வழி ஏற்படுத்தவும் முடியும்

இந்தியா எமது நட்பு நாடாக இருந்தபோதிலும் எமது பிரச்சினைகளை நாமே கலந்து பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே எமதுகட்சியின் நிலைப்பாடாகும்.

தமிழர் பிரச்சினைக்கு நாம் மேற்கொள்ளவிருக்கும் தீர்வானது இந்திய- இலங்கை உடன்படிக்கையையும் வெகுதூரம் கடந்து செல்லுமளவுக்கு உறுதியானதாக இருக்கும்.

தற்போதைய நிலையில் நாம் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் பிரச்சினையின் தீர்வுக்கு உடன்படிக்கை மாத்திரம் போதாது.

இந்த நாட்டில் எந்த ஒரு வெளிநாட்டுப்படை இருப்பதையும் நாம் எதிர்க்கின்றோம்,

சர்வகட்சி மாநாட்டில் ஸ்ரீ.ல.சு.க. கட்சி கலந்து கொள்ளத் தவறியது, மாகாணசபை அமைப்பு முறையை அக்கட்சி அன்று ஏற்றுக்கொள்ளத் தவறியது ஆகியவையே இந்துப்படை இங்கு வருவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது,

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் டாக்டர் ராஜித சேனரத்ன, செயற்குழு உறுப்பினர் திரு. பி. ஜோர்ஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-ஜ-10

### சர்வதேச ..

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

உரிய கடமைகள், அதிகாரங்கள் பற்றி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா கடந்த திங்கட்கிழமை டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு நெவில் கனகரத்ன ஆகியோருடன் ஆராய்ந்தார்.

டாக்டர் நீலன் திருச்செல்வம் சிலி ஜனாதிபதி தேர்தல், பாகிஸ்தான் பொதுத் தேர்தல் ஆகியவற்றுக்கான சர்வதேச கண்காணிப்புக் குழுவில் இடம் பெற்றிருந்தார்.

இராஜதந்திரியான நெவில் கனகரத்ன பாகிஸ்தான் பொதுத் தேர்தலின் போது அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்றிருந்தார். (இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் சரஸ்வதி

நவரத்தினம் சரஸ்வதி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னையா தங்கம்மாவின் இளைய மகளும் முன்னாள் ஸ்ரீ ஞான வைரவர் கோவில் மனேஜரும், ஓய்வுபெற்ற யாழ் தபால் கந்தோர் தரம்பிரிப்பாளருமாகிய சுப்பிரமணியம் நவரத்தினத்தின் மனைவியும், காலம் சென்ற செல்லம்மா, பொலீஸ் நடராசா மற்றும் பரஞ்சோதியின் சகோதரியும் காலம் சென்ற பொன்னையா, இராமப்பிள்ளை மற்றும் பஞ்சரெத்தினம், திருப்பதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். பூதவுடல் 83/1, ஆனந்தன் வடலி வீதி, அரியாலையில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக 01 12 88 வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சுப்பிரமணியம்
நவரத்தினம்.

(7768

### திரு. அம்பலவாணர் சரவணபவான்

(ஓய்வுபெற்ற George Steward & co Ltd and J. D. B)

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு அம்பலவாணர் சரவணபவான் 29- 11- 88 செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் பார்வதிப் பிள்ளையின் அன்புமகனும், ருக்மணியின் அன்புக் கணவரும், செல்வி சிவகாமசுந்தரியின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற Advocate சிவகுருநாதன், சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற Grindlys Bank) ஆகியோரின் சகோதரரும். சர்வலோகேஸ்வரி கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற இராசம்மா சிவகுருநாதன், தவராணி சிவப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனரும். திரு. கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) சகலனும். ஆனந்தவள்ளி கருணாகரன், திலகவதி சண்முகலிங்கம், தேவிபகவதி சந்திரராஜா, நடேசன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும். ராஜி சிவலோகநாதம், சிறிதங்கநாயகி, சிறீஸ்காந்தன், சிறிகணநாதன், வாசுகி, சிவப்பிரசாத் (கனடா), சிவானந்தி ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

இறுதிக்கிரியைகள் 2- 12- 88 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
அ. நற்குணசேகரன்.

(7770)

## நன்றி நவிலல்

### C. இராமநாதன்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

15-10-88 ல் நடைபெற்ற இவரது ஈமச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், எங்கள் துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், யாழ்.போதனா வைத்தியசாலை 6 ஆம் வாட்டில் அவருக்கு வைத்திய சேவைகள் செய்த அனைவருக்கும், மேலும் 12-11-88 ல் நடைபெற்ற அன்னாரது அந்தியேட்டிக் கருமங்களில் கலந்து கொண்ட உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி இராமநாதன்,
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்.

(7998)

LONDON EXAMS

MAY - JUNE 1989

C.I.M.A., I.D.P.M., I.A.B., A.A.T.

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

ஆரம்பம்: 03 - 12 - 1988

தகைமை, திறமை, ஆற்றல், அனுபவம், கடமை, கண்ணியம் எல்லாம் ஒருங்கே அமைந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்களைக் கொண்ட கணக்கியல் கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்

HARVARD INSTITUTE
SUCCESSORS OF
CANTABIA INSTITUTE
(SISTER ORGANISATION OF OXONIA, COLOMBO)
No. 21, MAIN STREET, JAFFNA.
(2ஆம் குறுக்குத் தெருவழியாக வர வேண்டும்.)
(C 803)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna. on Thursday 1st December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org